Contact Us – PU | Contact Us – PU | Contact Us – PU | DDE in NEWS – | 19.02.2022 (Dina | Contact Us – PU | Contact Us – PU | Contact Us – PU

dde.pondiuni.edu.in/contact/

Gmail Google

PONDICHERRY UNIVERSITY
पांडिचेरी विश्वविद्यालय புதுவைப் பல்கலைக்கழகம்

Directorate of Distance Education

Silver Jubilee | Library | Students Portal | Gallery | DDE YouTube Channel | Alumni | Contact Us

About US | Academics | Programmes | Admissions | Examinations | Student Support Service

**Contact Us**

You are also most welcome to contract any of the following officers in case you need any clarifications regarding:

| Queries on | Phone Number | Email Id |
|---|---|---|
| • For all the queries | 0413-2654439 | ddehelpdesk@pondiuni.ac.in |
| • In case of unresolved queries | | director.dde@pondiuni.ac.in |
| • For all the queries regarding Examinations | 0413-2654436 | exams.dde@pondiuni.edu.in |
| • In case of unresolved queries regarding Examinations | | coe@pondiuni.ac.in |

**Contact us**


The Director,
Directorate of Distance Education, Pondicherry University,
Puducherry-605 014
Phone: 0413-2654439
Email: ddehelpdesk@pondiuni.ac.in

Type here to search

32°C Sunny ENG 11:32 17-09-2024

புதுச்சேரி பல்கலைக்கழகத்தில்

# ஆன்லைன், தொலைத்தூர கல்வி கற்றலுக்கான சர்வதேச மாநாடு




▶ புதுச்சேரி பல்கலைக்கழகத்தில் ஆன்லைன் மற்றும் தொலைத்தூர கல்வி கற்றலுக்கான சர்வதேச மாநாடு நடைபெற்றது.

**புதுச்சேரி, நவ. 1:** புதுச்சேரி பல்கலைக்கழகம், தொலைதூர கல்வி இயக்குநரகத்தின் கணினி அறிவியல் துறையுடன் இணைந்து, ஆன்லைன் மற்றும் கல்விக்கான தொலைதூரக்கல்வி கற்றல் என்ற சர்வதேச மாநாடு புதுச்சேரி பல்கலைக்கழகத்தின் கன்வென்ஷன் மற்றும் கலாசார மையத்தில் நடந்தது. பல்கலைக்கழகத்தின் இயக்குநர் பேராசிரியர் சென்னுபதி ராமையா வரவேற்று மாநாடு குறித்து பேசினார்.

புதுச்சேரி பல்கலைக்கழகத்தின் துணைவேந்தர் பேராசிரியர் குர்மீத் சிங் தலைமை தாங்கினார். சென்னை பல்கலைகழக துணை வேந்தர் பேராசிரியர் கௌரி தலைமை விருந்தினராக கலந்து கொண்டார். காரைக்கால் நேஷனல் ஸ்கூல் ஆப் டெக்னாலஜி இயக்குநர் பேராசிரியர் சங்கரநாராயணசாமி, புதுச்சேரி தொழில்நுட்பப் பல்கலைக் கழகத்தின் துணைவேந்தர் பேராசிரியர் மோகன் ஆகியோர் கௌரவ விருந்தினர்களாக கலந்து கொண்டு சிறப்புரையாற்றினர். பொறியியல் மற்றும் தொழில்நுட்பப் பள்ளியின் டீன், பேராசிரியை சித்ர லேகா மற்றும் கம்ப்யூட்டர் சயின்ஸ் தலைமை பேராசிரியர் சிவ சத்யா ஆகியோர் இந்த மாநாட்டிற்கான ஏற்பாடுகளை செய்திருந்தனர்.

# தொலைதூர கல்வியில் மாணவர் சேர்க்கை

புதுச்சேரி, மார்ச் 2-

புதுவை பல்கலைக்கழக உதவி பதிவாளர் மகேஷ் வெளியிட்டுள்ள செய்தி குறிப்பில், புதுவை பல்கலைக்கழக தொலைதூரக் கல்வி இயக்குனரகத்தில் மொத்தம் 20 பட்டப்படிப்புகள் வழங்கப்படுகிறது. இதில் 8 எம்பிஏ படிப்புகள், எம்ஏ ஆங்கிலம், ஹிந்தி, சமூகவியல், எம்.காம்' (நிதி) உட்பட 4 முதுகலை பட்டங்கள், 8 இளநிலை படிப்புகள் (பிபிஏ, பி.காம், பிஏ ஆங்கிலம், பொருளியல், வரலாறு, அரசியல் அறிவியல், சமூகவியல், பத்திரிகை மற்றும் வெகு ஜன தொடர்பு) அடங்கும். கோவிட் காரணமாக இந்தாண்டு காலண்டர் ஆண்டு 2022 சேர்க்கை தாமதமானது. இதனால் மார்ச் 1 அன்று மாணவர் சேர்க்கை தொடங்கி மார்ச் 31ம் தேதி முடிவடைகிறது. மேலும் தகவலுக்கு *https://dde.pondiuni.edu.in/* என்ற இணையதளத்தை பார்த்து தெரிந்து கொள்ளலாம் என தெரிவித்துள்ளார்.

பத்திரிகை செய்தி மற்றும்
விளம்பரங்களுக்கு
தொடர்பு கொள்ளவும்
9442634795

PONBIL00129
Email: thillaimaildaily@gmail.com
THILLAI MAIL
தில்லை மெயில்
தினசரி காலை நாளிதழ்
மலர் : 1 இதழ் : 260
VOLUME: 1 ISSUE: 260
8 பக்கம் ரூ.500 காசு
புதுச்சேரி (03-03-2022)
வியாழக்கிழமை




# தொலைதூரக் கல்வி மாணவர் சேர்க்கை பாண்டிச்சேரி பல்கலைக்கழகத்தில் தொடக்கம்




புதுச்சேரி, மார்ச்.03–

புதுச்சேரி பல்கலைக்கழக உதவி பதிவாளர் மகேஷ் வெளியிட்டுள்ள பத்திரிகை செய்தியில் கூறியிருப்பதாவது:

பாண்டிச்சேரி பல்கலைக்கழகத்தின் நிபுணத்துவ மற்றும் வேலை சார்ந்த தொலைதூரக் கல்வித் திட்டங்கள், இன்றைய புதிய யுகத் தொழில் வல்லுநர்களுக்காக உருவாக்கப்பட்டவை

பாண்டிச்சேரி பல்கலைக்கழகம் தொலைதூர கல்வி இயக்குனரகத்தில் மொத்தம் 20 பட்டப்படிப்புகளை வழங்குகிறது. முதுநிலை பட்டப்படிப்பில் எம்.பி.ஏ., பிரிவில் சந்தைப்படுத்தல், நிதி, மனித வள மேலாண்மை, சர்வதேச வணிகம், பொது, சுற்றுலா, செயல்பாடுகள் மற்றும் விநியோகச் சங்கிலி மேலாண்மை மற்றும் மருத்துவமனை மேலாண்மை ஆகிய 8 பிரிவுகளில் பட்டப்படிப்புகளை வழங்குகிறது.

ஆங்கிலம், ஹிந்தி, சமூகவியல் ஆகியவற்றில் எம்.ஏ., பட்டப் படிப்புகளும், எம்.காம்.,ல் நிதி உட்பட 4 பட்டப் படிப்புகளும் வழங்குகிறது. மேலும் பி.பி.ஏ., பி.காம்., பி.ஏ., ஆங்கிலம், பொருளாதாரம், வரலாறு, அரசியல் அறிவியல், சமூகவியல் மற்றும் பத்திரிகை – வெகுஜன தொடர்பு ஆகிய 8 இளநிலைப் பட்டப் படிப்புகளையும் வழங்குகிறது. சேர்க்கை செயல்முறை பொதுவாக காலண்டர் ஆண்டிற்கான ஜனவரியில் தொடங்கும். கோவிட் 19 தொற்று நிலைமை காரணமாக, இந்த ஆண்டு காலண்டர் ஆண்டு 2022 சேர்க்கை தாமதமானது இதனால் 1 மார்ச் 2022 அன்று மாணவர் சேர்க்கை தொடங்கி 31 மார்ச் 2022 அன்று முடிவடைகிறது. பாண்டிச்சேரி பல்கலைக்கழகத்தின் இணைப்புக் கல்லூரிகளில் வழக்கமான கல்வி மற்றும்தொழிற்கல்விதிட்டங்களில் சேர முடியாத அனைவருக்கும் தொழில்முறை மற்றும் வேலை சார்ந்த கல்வித் திட்டங்களை வழங்குகிறது. முறையான/ வளாகத்தில் உள்ள ஸ்ட்ரீம்களில் உயர்கல்வியைத் தொடர முடியாத மக்களின் தேவைகளைப் பூர்த்தி செய்வதற்காக இது செய்யப்படுகிறது. இந்த பட்டப்படிப்புகள் ஏஐடிசிஇ புது தில்லி மற்றும் தொலைதூரக் கல்விப் பணியகம் ஆகியவற்றால் அங்கீகரிக்கப்பட்டு ஒப்புதல் வழங்கப்பட்டுள்ளது.

தொலைதூரக் கல்வி இயக்ககம் கற்பித்தலின் தேவைகளைப் பூர்த்தி செய்வதற்காக, 29 ஆசிரியர்களையும், 17 பேராசிரியர்கள் பாட ஒருங்கிணைப்பாளர்களையும், பல முழுநேர ஆசிரியர் மற்றும் நிர்வாகப் பணியாளர்களையும் கொண்டுள்ளது. இந்த ஆண்டு, தனது வெள்ளி விழாவைக் கொண்டாடுகிறது. மேலும் தகவலுக்கு, <https://dde.pondiuni.edu.in/>என்ற இணையதளத்தைப் பார்க்கவும்.

இவ்வாறு அவர் கூறியுள்ளார்.

பத்திரிகை செய்தி மற்றும்
விளம்பரங்களுக்கு
தொடர்பு கொள்ளவும்
9442634795

PONBIL00129
Email: thillaimaildaily@gmail.com
THILLAI MAIL
தில்லை மெயில்
தினசரி காலை நாளிதழ்
மலர் : 1 இதழ் : 291
VOLUME: 1 ISSUE: 291
8 பக்கம் ரூ.500 காசு
புதுச்சேரி (03-04-2022)
ஞாயிற்றுக்கிழமை

860 860 5550 860 860 5551
SRI ANNAMALAIYAR
ACTING DRIVERS
Good Driver
BEST SERVICE
D.K.Kumar
PUDUCHERRY

## சிறந்த கல்வியாளர் விருது பெற்ற

# பல்கலை இயக்குநருக்கு துணைவேந்தர் வாழ்த்து



புதுச்சேரி, ஏப்.03

புதுடெல்லியில் இயங்கி வரும் புதிய கல்விக் குறியீட்டு நிறுவனமானது இந்திய அளவில் உயர் கல்வியில் சிறந்த விளங்கும் அதிகாரிகளுக்கும், பல்கலைக்கழகப் பேராசிரியர்களுக்கும் ஆண்டுதோறும் சிறந்த கல்வியாளருக்கான விருதை வழங்கி வருகிறது.

இந்த வருடத்திற்கான விருது புதுவைப் பல்கலைக்கழக தொலைதூர கல்வி இயக்ககத்தின் இயக்குநர் பேராசிரியர் ராமையாவிற்கு வழங்கப்பட்டது.

புதுதில்லியில் நடந்த விழாவில் மத்திய அரசின் அகில இந்திய தொழில் நுட்பக் கழகத் தலைவர் பேராசிரியர் அனில் சகஸ்ரபுதே சிறப்பு விருந்தினராகக் கலந்து கொண்டு விருதை வழங்கினார்.

புதுவைப் பல்கலைக்கழகத் தொலைதூர இயக்ககத்தில் நவீன தொழில் நுட்பங்களைக் கொண்டு உயர் கல்வி மேம்பாடு, பன்னாட்டுத் தரத்திலான நவீன இணைய வழியிலான கட்டமைப்புகளை உருவாக்குதல் மற்றும் தொலைதூர படிப்புகளை இந்தியா மற்றும் அயல்நாடுகளுக்குக் கொண்டு செல்லுதல் போன்ற மிகச் சிறந்த கல்விச் சேவைக்காக விருது பேராசிரியர் ராமையாவிற்கு வழங்கப்பட்டது.

150க்கும் மேற்பட்ட பன்னாட்டுத் தரத்திலான ஆய்வுக் கட்டுரைகளை எழுதி வெளியிட்டுள்ள பேராசிரியர் ராமையா இந்திய கல்வியாளர் கழகத்தின் தேசியத் துணைத்தலைவராகவும் உள்ளார் என்பது குறிப்பிடத்தக்கது.

விருதுபெற்ற இயக்குநர் பேராசிரியர் ராமையா மரியாதை நிமித்தமாக பல்கலைக்கழகத் துணைவேந்தர் பேராசிரியர் குர்மீத்சிங்கை நேரில் சந்தித்தது வாழ்த்துப் பெற்றார்.

# புதுவை பல்கலைக்கழகம் சார்பில் பெங்களூருவில் வேலைவாய்ப்பு முகாம்

புதுச்சேரி, செப். 7: தொலை தூரக் கல்வி இயக்குநரகம் பாண்டிச்சேரி பல்கலைக் கழகம் மற்றும் செயின்ட் ஜோசப்எம்பிஏ டிவின்னிங் புரோகிராமிங் இணைந்து வேலைவாய்ப்பு முகாம் பெங்களூருவில் உள்ள செயின்ட் ஜோசப்ஸ் கல்லூரியில் நடத்தப்பட்டது. பாண்டிச்சேரி பல்கலைக்கழக வேலைவாய்ப்பு கண்காட்சி பெரும் வரவேற்பைப் பெற்றதால் பெங்களூருவில் நடந்த வேலைவாய்ப்பு கண்காட்சியும் பெரும் வரவேற்பை பெற்றது.

இதில் 15க்கும் மேற்பட்ட நிறுவனங்கள் பங்கேற்றன.

25 மாணவர்களுக்கு அன்றைய தினமே பணி வாய்ப்பு கடிதத்தை நிறுவனங்கள் வழங்கின. துணைவேந்தர் பேராசிரியர் குர்மீத் சிங்கின் ஊக்கத்துடன் ஒவ்வொரு ஆண்டும் வேலைவாய்ப்பு கண்காட்சி நடத்தப்படுகிறது.

தொலைதூரக்கல்வி இயக்கநரக இயக்குனர் பேராசிரியர் சென்னுபதி கே.ராமையா, நாடு முழுவதும் தொடர்ச்சியாக 2 முறை வேலைவாய்ப்பு கண்காட்சிகளை நடத்தி வருகிறார்.

இந்த நிகழ்ச்சி மாணவர்களிடையே நல்ல வரவேற்பை பெற்றதால், சீரான இடைவெளியில் இதுபோன்ற நிகழ்ச்சியை நடத்த விருப்பம் தெரிவித்துள்ளனர் என புதுவை பல்கலைக்கழக செய்திக் குறிப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

# புதுவை பல்கலை.யில் வேலைவாய்ப்பு முகாம்

**புதுச்சேரி, ஜூன் 7:** புதுவை பல்கலைக்கழக தொலைநிலைக் கல்வி மாணவர்களுக்கான வேலைவாய்ப்பு முகாம் நடத்தப்பட்டது.

புதுவை பல்கலைக்கழக தொலைநிலைக் கல்வி இயக்ககம் சார்பில் அண்மையில் நடைபெற்ற வேலைவாய்ப்பு முகாமில் பெரிய நிறுவனங்களின் 64 பதவிகளுக்கு மாணவர்கள் தேர்வு செய்யப்பட்டு, 17 பேருக்கு அதற்கான கடிதங்கள் வழங்கப்பட்டன.

தொலைநிலைக் கல்வி இயக்குநர் சென்னுபதி கே.ராமையா உள்ளிட்ட குழுவினர் முகாமை ஒருங்கிணைத்தார்.

தொடர்ந்து, இணைய வழியில் வேலைவாய்ப்புக் கண்காட்சியை நடத்தவும் திட்டமிடப்பட்டுள்ளதாக பல்கலைக்கழக உதவி பதிவாளர் (செய்தித் தொடர்பு) கி.மகேஷ் தெரிவித்தார்.

**08 JUN 2022**
WEDNESDAY

**BREAKING NEWS**

PONDY HEADLINES
POWERED BY yocto




**புதுவை பல்கலை.யில் வேலைவாய்ப்பு முகாம்**

# புதுவை பல்கலைக்கழக தொலைநிலைக் கல்வி மாணவர்களுக்கான வேலைவாய்ப்பு முகாம் நடத்தப்பட்டது


For Advertisement Contact - 9087885565 / 9087115565

உங்களது பொருளாதார வளர்ச்சியை உறுதி செய்யவும் ,
அனைத்து எதிர்காலத் தேவைகளையும் சிறப்பாக நிறைவேற்றவும்,
பாதுகாப்பான கிரிப்டோ கரன்சி முதலீட்டுத் திட்டங்களில் முதலீடு
செய்து பயன்பெறுங்கள்.

CRYPTO | STAKING | MINING | HOLDING | ROBO TRADING

SRI SAI
Crypto Consultancy

No.1, Thillai Meshtri Street, Puducherry - 605001.
9787761027 8012799968 9600430258

பத்திரிகை செய்தி மற்றும்
விளம்பரங்களுக்கு
தொடர்பு கொள்ளவும்
9442634795

PONBIL00129
Email: thillaimaildaily@gmail.com
THILLAI MAIL
தில்லை மெயில்
தினசரி காலை நாளிதழ்
மலர் : 1 இதழ் : 357
VOLUME: 1 ISSUE: 357
8 பக்கம் ரூ.500 காசு
புதுச்சேரி (08-06-2022)
புதன்கிழமை




# தொலைதூர கல்வி மாணவர்களுக்காக பல்கலைக்கழகத்தில் வேலைவாய்ப்பு கண்காட்சி




புதுச்சேரி, ஜூன்.8–

புதுவை பல்கலைக்கழகத்தின் தொலைதூரக் கல்வி இயக்குநரகம் பல்கலைக்கழகத்தின் கன்வென்ஷன் மற்றும் கலாச்சார மையத்தில் கடந்த 4ம் தேதி வேலைவாய்ப்புக் கண்காட்சியை நடத்தியது. யூஜிசி வழிகாட்டுதலின்படி மற்றும் துணைவேந்தர், குர்மீத் சிங் ஊக்கத்தினாலும், தொலைதூரக் கல்வி இயக்குநர் பேராசிரியர் சென்னுபதி ராமையா முயற்சியால் இந்த கண்காட்சி ஏற்பாடு செய்து நடத்தப்பட்டது.

புதுவைப் பல்கலைக்கழகத்தின் தொலைதூரக் கல்வி இயக்குநரகத்தின் மாணவர்களுக்காக, முன்னணி நிறுவனங்கள்/ நிறுவனங்களில் உள்ள பல்வேறு தொழில் வாய்ப்புகளைப் பற்றி அறிந்து கொள்வதற்காக, இந்த வேலைவாய்ப்புக் கண்காட்சி பிரத்தியேகமாக ஏற்பாடு செய்யப்பட்டது.

இதில் 64 பதவிகளுக்குரியவர்கள் தேர்ந்தெடுக்கப்பட்டனர். 17 பேருக்கு அந்த இடத்திலேயே சேர்க்கை கடிதங்கள் வழங்கப்பட்டன. இதில் எல்ஐசி, யூரேகா போர்ப்ஸ், லேபிராக்ஸ் ரப்பர் லைனிங்ஸ், இன்டகரா, கிண்டி மெஷின் டூல்ஸ், இன்டஸ்ட்ரிஸ் உள்ளிட்ட நிறுவனங்கள் பங்கேற்றன.

# புதுவை பல்கலைக்கழகத்தில் வேலைவாய்ப்பு முகாம்



புதுவை பல்கலைக்கழகத்தின் தொலைதூரக் கல்வி இயக்குநரகம் சார்பில் நடந்த வேலை வாய்ப்பு முகாமில் தேர்வான மாணவர்களுக்கு பணி ஆணை வழங்கப்பட்டது.

புதுச்சேரி, ஜூன் 9- புதுவை பல்கலைக்கழகத்தின் தொலைதூரக் கல்வி இயக்குநரகம் சார்பில் வேலைவாய்ப்பு முகாம் பல்கலைக்கழக கலாசார மையத்தில் நடந்தது. தொலைதூர கல்வி இயக்குநரகத்தின் மாணவர்கள் முன்னணி நிறுவனங்களில் உள்ள பல்வேறு தொழில் வாய்ப்புகளை பற்றி அறிந்து கொள்வதற்காக, இந்த வேலை வாய்ப்பு கண்காட்சி பிரத்தியேகமாக ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது. இதில் 64 பதவிகளுக்கு மாணவர்கள் தேர்ந்தெடுக்கப்பட்டனர். அதில் 17 பதவிகளுக்கு பணி ஆணை வழங்கப்பட்டது.

இதுகுறித்து தொலைதூரக் கல்வி இயக்குநரகத்தின் (டிடிஇ) இயக்குநர் ராமையா கூறுகையில், எல்ஐசி, யூரேகா உட்பட பல்வேறு நிறுவனங்கள் வேலைவாய்ப்பு கண்காட்சியில் பங்கேற்றது மட்டுமின்றி அவர்கள் தொலைதூர மாணவர்களின் அறிவு நிலை குறித்தும் தங்களின் திருப்தியை வெளிப்படுத்தியது. அந்த நிறுவனங்கள் எதிர்காலத்திலும் டிடிஇ வேலை வாய்ப்பு கண்காட்சியில் ஒரு அங்கமாக இருக்க விரும்பினர்.

இந்த வேலைவாய்ப்பு கண்காட்சியின் வெற்றியை கண்டு, புதுவை பல்கலைக்கழகத்தின் தொலைதூர கல்வி இயக்குநரகம் சார்பில் 4-6 வாரங்களில் மற்றொரு ஆன்லைன் வேலை வாய்ப்பு கண்காட்சியை நடத்த முடிவு செய்துள்ளோம் என்றார்.

# புதுச்சேரி பல்கலைக்கழகத்தில் வேலைவாய்ப்பு கண்காட்சி

**புதுச்சேரி, ஜூன் 10–**

புதுச்சேரி பல்கலைக் கழகத்தின் தொலைதூர கல்வி இயக்குநரகம், கன்வென்ஷன் மற்றும் கலாசார மையம் சார்பில் வேலைவாய்ப்பு கண்காட்சி நடந்தது.

புதுச்சேரி பல்கலைக் கழகத்தின் தொலைதூரக் கல்வி இயக்குநரக மாணவர்களுக்காக, முன்னணி நிறுவனங்களில் உள்ள பல்வேறு தொழில் வாய்ப்புகள் பற்றி அறிந்து கொள்ள, வேலை வாய்ப்பு கண்காட்சிக்கு ஏற்பாடு செய்யப்பட்டது.

இதில் 64 பதவிகள் தேர்ந்தெடுக்கப்பட்டு, 17 பதவிகளுக்கு சலுகை கடிதங்கள் வழங்கப்பட்டன. பல்கலைக்கழகத்தின் தொலைதூரக் கல்வி இயக்குநரக இயக்குநர் ராமையா கூறுகையில், 'எல்.ஐ.சி., உள்ளிட்ட நிறுவனங்கள் வேலை வாய்ப்பு கண்காட்சியில் பங்கேற்றன.

பல்கலைக் கழக வளாகத்தில் நேரடியாக படிக்கும் தகுதியான மாணவர்களை ஆட்சேர்ப்பு செய்வதற்கான வாய்ப்பை, வேலைவாய்ப்பு கண்காட்சி நிறுவனங்களுக்கு வழங்கியுள்ளது.

தற்போது நடைபெற்ற வேலை வாய்ப்பு கண்காட்சியின் வெற்றியை தொடர்ந்து, புதுச்சேரி பல்கலைக்கழகம் தொலைதூர கல்வி இயக்குநரகம் சார்பில், அடுத்த 4– 6 வாரங்களில் மற்றொரு ஆன்லைன் வேலைவாய்ப்பு கண்காட்சியை நடத்த முடிவு செய்துள்ளது.

இதில் நாடு முழுவதும் உள்ள மாணவர்கள், அவர்களின் சொந்த நகரத்திலிருந்து பங்கேற்க முடியும்' என்றார்.



■ புதுச்சேரி பல்கலைக் கழகத்தின் தொலைதூரக் கல்வி இயக்குநரகம், கன்வென்ஷன் மற்றும் கலாசார மையம் சார்பில் வேலைவாய்ப்புக் கண்காட்சி நடந்தது.

தொலைதூர கல்வி இயக்குநரகத்தில்

# இந்தாண்டுக்கான மாணவர் சேர்க்கை நவ.15ம் தேதி முடிவடைகிறது

## புதுவை பல்கலைக்கழகம் தகவல்

புதுச்சேரி, அக். 11: புதுச்சேரி பல்கலைக்கழகத்தின் உதவி பதிவாளர் (மக்கள் தொடர்பு) மகேஷ் வெளியிட்டுள்ள செய்திக்குறிப்பு:

புதுச்சேரி பல்கலைக்கழகத்தின் தொலைதூர கல்வி இயக்குநரகத்தால் மொத்தம் 20 பட்டப்படிப்புகள் வழங்கப்பட்டு வருகிறது. இதில் எம்பிஏ மேலாண்மை பட்டப்படிப்புகள்-8, எம்ஏ ஆங்கிலம், ஹிந்தி, சமூகவியல் மற்றும் எம்.காம் உட்பட முதுகலை பட்டப்படிப்புகள்-4, பிபிஏ, பி.காம், பிஏ ஆங்கிலம், பொருளாதாரம், வரலாறு, அரசியல் அறிவியல், சமூகவியல் மற்றும் பத்திரிகை-வெகுஜன தொடர்பு உட்பட 8 இளங்கலை பட்டப்படிப்புகள் அடங்கும். சேர்க்கைசெயல்முறை பொதுவாக கல்வி யாண்டில் ஜூலை மாதம் தொடங்கும். இருப்பினும், கோவிட்-19 பின்னடைவு காரணமாக டிஇபி, யுஜிசி கல்வி அமர்வு 2022க்கான இந்த ஆண்டு சேர்க்கைகள் திருத்தப்பட்டு செப்டம்பர் 1ம் தேதி தொடங்கி நவம்பர் 15ம் தேதி முடிவடைகிறது. பல்கலைக்கழகத்தின் இணைப்பு கல்லூரிகளில் வழக்கமான கல்வி மற்றும் தொழிற்கல்வி திட்டங்களில் சேர முடியாத அனைவருக்கும் தொழில்முறை மற்றும் வேலை சார்ந்த கல்வி திட்டங்களை தொலைதூர கல்வி இயக்குநரகம் வழங்குகிறது.

கடந்த கல்வியாண்டு சேர்க்கையின் போது, நாட்டின் எந்த பகுதியிலிருந்தும் மாணவர்கள் தங்கள் விண்ணப்ப படிவங்களை சமர்ப்பித்து, ஆன்லைனில் தங்கள் கட்டணத்தை செலுத்தும் வகையில் முழு சேர்க்கை செயல்முறையையும் தொலைதூர கல்வி இயக்குநரகம் அமல்படுத்தியது. துணைவேந்தர் குர்மீத் சிங்கின் தொலைநோக்கு மற்றும் வழிகாட்டுதலின் கீழ், தொலைதூர கல்வி இயக்குனரகம் மிக வேகமாக முன்னேறி வருகிறது. மேலும், மாணவர்களின் நலனுக்காக கடந்த பிப்ரவரியில் தொடர்ச்சியான சர்வதேச வலைப்பதிவுகளையும், ஜூன் மற்றும் செப்டம்பரில் வேலைவாய்ப்பு கண்காட்சியையும் புதுச்சேரி மற்றும் பெங்களூரில் நடத்தியது. இது அதிக எண்ணிக்கையிலான மாணவர்களுக்கு வேலைவாய்ப்பு பெற உதவியது.

மேலும், கற்பித்தலின் தேவைகளை பூர்த்தி செய்வதற்காக, தொலைதூர கல்வி இயக்குநரகம் 29 ஆசிரிய உறுப்பினர்களையும், 17 பாட ஒருங்கிணைப்பாளர்களையும், பல முழுநேர ஆசிரியர் மற்றும் நிர்வாக பணியாளர்களையும் கொண்டுள்ளது. இந்த ஆண்டு தொலைதூர கல்வி இயக்குநரகம் தனது வெள்ளி விழாவை கொண்டாடுகிறது. இதுவரை செய்யப்படாத பல புதுமைகளை அறிமுகப்படுத்த திட்டமிட்டுள்ளது, சர்வதேச, தேசிய வெபினர்கள், பட்டறைகள், கருத்தரங்குகள், மற்றும் மாநாடுகள் அவற்றில் அடங்கும். மேலும் தகவலுக்கு, https://dde.pondiuni.edu.in/ என்ற இணையதளத்தை பார்க்கவும். இவ்வாறு அவர் கூறியுள்ளார்.

## INBRIEF




# Admissions to PU distance education courses begin

The Directorate of Distance Education (DDE) at Pondicherry University has commenced the admission process for various UG and PG programmes. According to the revised schedule, this year's admissions for the academic session will end on November 15. The DDE has automated the entire admissions process for professional and job-oriented courses so that students from any part of the country could submit application forms and pay fees online, said C.K. Ramaiah, Director, DDE, Pondicherry University. More information is available on https://dde.pondiuni.edu.in/

# தொலைதூர கல்வி சேர்க்கை 31ம் தேதியுடன் முடிகிறது

**புதுச்சேரி, மார்ச் 24–**

புதுச்சேரி பல்கலைக் கழகத்தில் தொலைதூர கல்வி இயக்குனரக மாணவர் சேர்க்கை, வரும் 31ம் தேதியுடன் முடிகிறது.

புதுச்சேரி பல்கலைக் கழக உதவி பதிவாளர் மகேஷ் வெளியிட்டுள்ள செய்திக்குறிப்பு:

புதுச்சேரி பல்கலைக் கழகத்தின் தொலைதூர கல்வி இயக்குனரகத்தில் மொத்தம் 20 பட்டப் படிப்புகள் நடத்தப்பட்டு வருகிறது.

இதில் எட்டு எம்.பி.ஏ., மேலாண்மை படிப்புகளும் உள்ளன. வழக்கமாக தொலைதூர கல்வி இயக்குனரகத்தில் மாணவர் சேர்க்கை ஜனவரியில் துவங்கும். கொரோனா தொற்று பரவல் காரணமாக இந்தாண்டு மாணவர் சேர்க்கை மார்ச் 1ம் தேதி துவங்கியது. மாணவர் சேர்க்கை வரும் 31ம் தேதியுடன் முடிகிறது. .மாணவர் சேர்க்கை குறித்த மேலும் தகவல்களுக்கு https://dde.pondiuni.edu.in என்ற இணைய முகவரியை காணவும்.

இவ்வாறு அதில் கூறப்பட்டுள்ளது.

# புதுவை பல்கலை.யில் தொலைநிலைக் கல்வி சேர்க்கை: மார்ச் 31-இல் நிறைவு

**புதுச்சேரி, மார்ச் 24:** புதுவை மத்தியப் பல்கலைக்கழகத்தின் தொலைநிலைக் கல்விக்கான மாணவர்கள் சேர்க்கைக்கான அவகாசம் மார்ச் 31-ஆம் தேதியுடன் நிறைவு பெறுகிறது.

இதுகுறித்து அதன் உதவிப் பதிவாளர் மகேஷ் வெளியிட்ட செய்திக்குறிப்பில் கூறியிருப்பதாவது: தொலைநிலைக் கல்வி இயக்ககத்தில், ஆண்டுதோறும் மாணவர்கள் சேர்க்கை ஜனவரி மாதத்தில் தொடங்கி நடைபெறும். இதனிடையே, கரோனா தொற்று பரவல் காரணமாக, நிகழாண்டு மாணவர்கள் சேர்க்கை கடந்த மார்ச்-1 ஆம் தேதி தொடங்கியது. மார்ச் 31-ஆம் தேதியுடன் நிறைவடைகிறது என்று அவர் கூறினார்.

## தொலைதூர கல்வி இயக்குநரகத்தில்

# இந்தாண்டுக்கான மாணவர் சேர்க்கை 31ம் தேதியுடன் முடிவடைகிறது

## பல்கலை., உதவி பதிவாளர் தகவல்

**புதுச்சேரி, மார்ச் 26:** புதுச்சேரி பல்கலைக்கழக உதவி பதிவாளர் மகேஷ் வெளியிட்டுள்ள செய்திக்குறிப்பு: புதுச்சேரி பல்கலைக்கழகத்தின் தொலைதூர கல்வி இயக்குநரகத்தால் மொத்தம் 20 பட்டப்படிப்புகள் வழங்கபட்டு வருகிறது. இதில் எம்பிஏ - சந்தைப்படுத்தல், நிதி, மனித வள மேலாண்மை, சர்வதேச வணிகம், பொது, சுற்றுலா, செயல்பாடுகள் மற்றும் விநியோகச் சங்கிலி, மேலாண்மை, மருத்துவமனை மேலாண்மை ஆகிய 8 பிரிவுகள் உள்ளன. எம்ஏ - ஆங்கிலம், இந்தி, சமூகவியல், எம்.காம் (நிதி) ஆகிய 4 முதுகலை பட்டங்கள், பிபிஏ, பி.காம், பிஏ - ஆங்கிலம், பொருளாதாரம், வரலாறு, அரசியல் அறிவியல், சமூகவியல் மற்றும் பத்திரிகை & வெகுஜன தொடர்பு ஆகிய 8 இளங்கலை பட்டங்கள் உள்ளன. பல்கலைக்கழகத்தின் இணைப்பு கல்லூரிகளில், வழக்கமான கல்வி மற்றும் தொழிற்கல்வி திட்டங்களில் சேர முடியாத அனைவருக்கும் தொழில்முறை மற்றும் வேலை சார்ந்த கல்வி திட்டங்களை வழங்குகிறது. சேர்க்கை செயல்முறை பொதுவாக காலண்டர் ஆண்டிற்கான ஜனவரியில் தொடங்கும். கோவிட்-19 தொற்று காரணமாக, 2022ம் ஆண்டு சேர்க்கை தாமதமானது. இதனால் மார்ச் 1ம் தேதி மாணவர் சேர்க்கை தொடங்கிவரும் 31ம் தேதி முடிவடைகிறது.

புதுவை பல்கலைக்கழக தொலைதூர கல்வி இயக்குநரகம் மாணவர்களின் நலனுக்காக கடந்த பிப்ரவரியில் இருந்து தொடர்ச்சியான சர்வதேச வலைப்பதிவுகளை நடத்தி வருகிறது. மேலும், கற்பித்தலின் தேவைகளை பூர்த்தி செய்வதற்காக, தொலைதூர கல்வி இயக்குநரகம் 29 ஆசிரிய உறுப்பினர்களையும், 17 பேராசிரியர்கள் பாட ஒருங்கிணைப்பாளர்களையும், பல முழுநேர ஆசிரியர் மற்றும் நிர்வாகப் பணியாளர்களையும் கொண்டுள்ளது. இந்த ஆண்டு தனது வெள்ளி விழாவை கொண்டாடுகிறது. இதுவரை செய்யப்படாத பல புதுமைகளை அறிமுகப்படுத்த திட்டமிட்டுள்ளது. சர்வதேச, தேசிய வெபினர்கள், பட்டறைகள், கருத்தரங்குகள், மற்றும் மாநாடுகள் அவற்றில் அடங்கும். சென்னை, பெங்களூரு மற்றும் கொல்கத்தாவில் மாணவர்களுக்கு உதவ வேலைவாய்ப்பு கண்காட்சியை ஏற்பாடு செய்யப் போகிறது. மேலும் தகவலுக்கு https://dde.pondiuni.edu.in/ என்ற இணையதளத்தைப் பார்க்கவும்.

இவ்வாறு அவர் கூறியுள்ளார்.

# புதுச்சேரி பல்கலையில் சர்வதேச கருத்தரங்கம்



புதுச்சேரி பல்கலைக்கழகத்தில் கற்றல், கற்பித்தல் வழிமுறைகள் குறித்த சர்வதேச கருத்தரங்கில் விழா மலரை துணைவேந்தர் குர்மீத் சிங் வெளியிட்டார். அருகில், தமிழ்நாடு ஆசிரியர் கல்வியியல் பல்கலைக்கழக துணைவேந்தர் பஞ்சநாதன்.

புதுச்சேரி, அக். 26– புதுச்சேரி பல்கலையில் சர்வதேச கருத்தரங்கம் நடந்தது.

புதுச்சேரி பல்கலைக் கழக தொலைதூர கல்வி இயக்ககம், பல்கலை., கல்வியியல் புலம் சார்பில் முறைசார் மற்றும் தொலை தூர கல்வியில் கற்றல், கற்பித்தல் வழிமுறைகள் குறித்து சர்வதேச கருத்த ரங்கம் நடந்தது.

துணைவேந்தர் குர்மீத் சிங் தலைமை தாங்கி, கருத்தரங்கை துவக்கி வைத்தார். தமிழ்நாடு ஆசி ரியர் கல்வியியல் பல்க லைக்கழக துணைவேந்தர் பஞ்சநாதன் பேசுகையில், 150 கற்பித்தல் வழிமுறை கள் உள்ளன.

இதனை ஆசிரியர்கள் கற்றுக்கொண்டு, மாணவர் களுக்கு எளிதாக பயிற்று விக்க வேண்டும் என்றார்.

தமிழ்நாடு மத்திய பல்க லைக்கழக துணைவேந்தர் கிருஷ்ணன் பேசுகையில், இந்தியாவின் வளர்ச்சிக்கு தேவைப்படும் மாண வர்களை உருவாக்குவது ஆசிரியர்கள் கடமையாக கொள்ள வேண்டும். இவர் கள் இந்தியாவை சேர்ந்த மாணவர்கள் என்று பெரு மைப்படத்தக்க வகையில் அவர்களை வளர்த்தெடுக்க ஆசிரியர்கள் பயிற்சி அளிக்க வேண்டும் என்றார்.

சிறப்பு அமர்வில் சுய மாக கற்றல், ஒழுங்கமைக் கப்பட்ட முறையில் கற்றல் குறித்து கலந்துரையாடல் நடந்தது. கருத்தரங்கிற்கு உலக அளவில் இருந்து 80க்கும் மேற்பட்ட கல் வியாளர்களின் கட்டுரை சமர்ப்பிக்கப்பட்டு இருந் தது. இவற்றில் 42 கட்டு ரைகள் மீது கலந்துரையா டல் விவாதம் நடந்தது.

பல்கலைக்கழக கல்வி பிரிவு இயக்குனர் தரணிக் கரசு, கல்வியியல் டீன் ராமையா உள்பட பலர் கலந்து கொண்டனர்.


நிறைவு விழாவில் புதுச் சேரி தொழில்நுட்ப பல்க லைக்கழக துணைவேந்தர் மோகன் சிறப்புரையாற்றி னார். பல்வேறு நாடுகளை சேர்ந்த கல்வியாளர்கள் கலந்து கொண்டனர்.

# புதுச்சேரி மத்திய பல்கலை கழகத்தில் தொலைதூர கற்றல் சர்வதேச மாநாடு

புதுச்சேரி, அக். 31–

புதுச்சேரி மத்திய பல்கலைக்கழகம், தொலைதூர கல்வி இயக்குனரகம், கணினி அறிவியல் துறை இணைந்து 'கல்விக்கான தொழில்நுட்பத்தால் இயக்கப்பட்ட ஆன்லைன் மற்றும் தொலைதூர கற்றல்' என்.இ.பி., 2020ன் சூழலில் சர்வதேச மாநாடு நடந்தது.

புதுச்சேரி கன்வென்ஷன் மற்றும் கலாச்சார மையத்தில் நடந்த மாநாட்டிற்கு, துணை வேந்தர் குர்மீத்சிங் தலைமை தாங்கினார். தொலைதூர கல்வி இயக்குநரக புதுச்சேரி பல்கலைக்கழக இயக்குநர் சென்னுபதி ராமையா, உயர்தர கல்வி, குறைந்த கட்டண கட்டமைப்பு மற்றும் தற்போதைய தகவல்களை அணுகுவதில் தொலைதூர கல்வி இயக்குனரகம் தனித்துவமான சேவை பற்றி கூறினார்.



புதுச்சேரி பல்கலைக் கழகம், தொலைதூர கல்வி இயக்குனரகம், கணினி அறிவியல் துறை இணைந்து 'கல்விக்கான தொழில்நுட்பத்தால் இயக்கப்பட்ட ஆன்லைன் மற்றும் தொலைதூர கற்றல்' என்.இ.பி., 2020ன் சூழலில் சர்வதேச மாநாடு நடந்தது.

காரைக்கால் நேஷனல் ஸ்கூல் ஆப் டெக்னாலஜி இயக்குநர் சங்கரநாராயணசாமி, புதுச்சேரி தொழில்நுட்ப பல்கலைக் கழக துணை வேந்தர் மோகன் ஆகியோர் மாநாட்டின் நோக்கம் பற்றி பேசினர்.

மாநாட்டில், மாணவர்களை மையமாக கொண்ட கற்றலில் ஈடுபடவும், பணி கட்டமைப்பு நெறிப்படுத்தவும் ஏற்பாடு செய்யப்பட்டது.

ஏற்பாடுகளை, பொறியியல் மற்றும் தொழில்நுட்ப பள்ளி டீன் சித்ரலேகா, கணினி அறிவியல் துறை பேராசிரியர் சிவசத்யா ஆகியோர் செய்தனர். மாநாட்டில், உலகம் முழுவதும் இருந்து 40 ஆய்வு கட்டுரைகள் சமர்பிக்கப்பட்டது.

இதன் நிறைவு விழாவிற்கு, சென்னை பல்கலைக்கழக துணை வேந்தர் கவுரி தலைமை தாங்கி, பாராட்டுரை வழங்கினார்.

புதுவை பல்கலைக்கழகத்தில்

# சர்வதேச கற்றல் மாநாடு

புதுச்சேரி, அக்.31—

புதுவை மத்திய பல்கலைக்கழகம், தொலைதூர கல்வி இயக்குனரகம், கணினி அறிவியல்துறை இணைந்து சர்வதேச மாநாடை நடத்தியது.

கலாச்சார மையத்தில் நடந்த மாநாட்டுக்கு துணைவேந்தர் குர்மீத்சிங் தலைமை வகித்தார். தொலைதூர கல்வி இயக்குனரக இயக்குனர் சன்னுபதிராமையா, உயர்தர கல்வி குறித்து பேசினார். காரைக்கால் ஸ்கூல் ஆப் டெக்னாலஜி இயக்குனர் சங்கர்நாராயணசாமி, புதுவை தொழில்நுட்ப பல்கலைக்கழக துணைவேந்தர் மோகன் ஆகியோர் மாநாட்டின் நோக்கம் குறித்து பேசினர். நிறைவு விழாவுக்கு சென்னை பல்கலைக்கழக துணைவேந்தர் கவுரி தலைமை வகித்து பாராட்டி பேசினார்.

## புதுவை பல்கலை., தொலைதூர கல்வியில்

# முதுகலை படிப்பை முடிக்காதவர்கள் மீண்டும் தேர்வு எழுத கடைசி வாய்ப்பு

## 25ம் தேதிக்குள் பதிவு செய்ய அறிவுறுத்தல்

புதுச்சேரி, ஜன. 16: புதுச்சேரி பல்கலைக்கழகத்தின் மக்கள் தொடர்பு பிரிவு உதவி பதிவாளர் மகேஷ் வெளியிட்டுள்ள செய்திக் குறிப்பு:

இந்தியா முழுவதிலுமிருந்து வரும் மாணவர்களின் பல கோரிக்கைகள் காரணமாக, தொலைதூர கல்வி இயக்குநரகத்தின் கீழ் பட்டப்படிப்பை முடிக்க நிர்ணயிக்கப்பட்ட அதிகபட்ச காலத்தை முடித்த எம்பிஏ மற்றும் முதுகலை மாணவர்களுக்கு கூடுதல் வாய்ப்பை புதுச்சேரி பல்கலைக்கழக துணைவேந்தர் குர்மீத் சிங் வழங்கியுள்ளார். 2005-06ம் கல்வியாண்டு முதல் 2016ம் ஆண்டு வரையிலான அனைத்து எம்பிஏ மாணவர்களும், 2014-15 முதல் 2016ஆம் ஆண்டு காலண்டர் ஆண்டு பிரிவின் எம்.காம், எம்.ஏ (ஆங்கிலம், சமூகவியல், இந்தி) மாணவர்களும், பாடத்திட்டத்தை முடிப்பதற்கு அதிகபட்சமாக நிர்ணயிக்கப்பட்ட காலத்தை கடந்தவர்கள் 2022 ஜனவரியில் படிப்பை முடிப்பதற்கும், தங்களை மீண்டும் பதிவு செய்துகொண்டு பட்டப்படிப்புக்கு தகுதி பெறுவதற்கும் மேலும் ஒரு வாய்ப்பு வழங்கப்படுகிறது.

2005-06 முதல் 2016 காலண்டர் ஆண்டு எம்பிஏ மாணவர்கள் https://dde.pondiuni.edu.in/ல் கொடுக்கப்பட்டுள்ள புதிய பாடத்திட்டத்தின் படி சமமான தாளை எழுத வேண்டும். மறுபதிவு கட்டணமாக ரூ.5000 செலுத்தி மாணவர்கள் இந்த வாய்ப்பை பயன்படுத்தி தேர்வுகளுக்கு தன்னை பதிவு செய்து கொண்டு ஆன்லைன் தேர்வுக்கு தோன்றலாம். இந்த வாய்ப்பை பயன்படுத்தி, தேர்வு எழுத விரும்பும் மாணவர்கள், புதுச்சேரி பல்கலைக்கழக தொலைதூரக் கல்வி இயக்குநரகத்தில் உடனடியாக தங்களை மறுபதிவு செய்து கொள்ளுமாறு உத்தரவிடப்பட்டுள்ளது. ஜனவரி 2022 அமர்வு தேர்வுகளுக்கான மறுபதிவு கட்டணம் மற்றும் தேர்வு விண்ணப்பத்தைப் பெறுவதற்கான கடைசி நாள் வரும் 25ம் தேதி வரை நீட்டிக்கப்பட்டுள்ளது. முழுமையான விவரங்கள் அறிய, https://dde.pondiuni.edu.in/ என்ற இணையதளத்தைப் பார்க்கவும்.

இவ்வாறு அவர் கூறியுள்ளார்.

# புதுவை பல்கலைக்கழகத்தில் வேலைவாய்ப்பு முகாம்



புதுவை பல்கலைக்கழகத்தின் தொலைதூரக் கல்வி இயக்குநரகம் சார்பில் நடந்த வேலைவாய்ப்பு முகாமில் தேர்வான மாணவர்களுக்கு பணி ஆணை வழங்கப்பட்டது.

புதுச்சேரி, ஜூன் 9: புதுவை பல்கலைக்கழகத்தின் தொலைதூரக் கல்வி இயக்குநரகம் சார்பில் வேலைவாய்ப்பு முகாம் பல்கலைக்கழக கலாசார மையத்தில் நடந்தது. தொலைதூர கல்வி இயக்குநரகத்தின் மாணவர்கள் முன்னணி நிறுவனங்களில் உள்ள பல்வேறு தொழில் வாய்ப்புகளை பற்றி அறிந்து கொள்வதற்காக, இந்த வேலை வாய்ப்பு கண்காட்சி பிரத்தியேகமாக ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது. இதில் 64 பதவிகளுக்கு மாணவர்கள் தேர்ந்தெடுக்கப்பட்டனர். அதில் 17 பதவிகளுக்கு பணி ஆணை வழங்கப்பட்டது.

இதுகுறித்து தொலைதூரக் கல்வி இயக்குநரகத்தின் (டிடிஇ) இயக்குநர் ராமையா கூறுகையில், எல்ஐசி, யூரேகா உட்பட பல்வேறு நிறுவனங்கள் வேலைவாய்ப்பு கண்காட்சியில் பங்கேற்றது மட்டுமின்றி அவர்கள் தொலைதூர மாணவர்களின் அறிவு நிலை குறித்தும் தங்களின் திருப்தியை வெளிப்படுத்தியது. அந்த நிறுவனங்கள் எதிர்காலத்திலும் டிடிஇ வேலை வாய்ப்பு கண்காட்சியில் ஒரு அங்கமாக இருக்க விரும்பினர். இந்த வேலை வாய்ப்பு கண்காட்சியின் வெற்றியை கண்டு, புதுவை பல்கலைக்கழகத்தின் தொலைதூர கல்வி இயக்குநரகம் சார்பில் 4-6 வாரங்களில் மற்றொரு ஆன்லைன் வேலை வாய்ப்பு கண்காட்சியை நடத்த முடிவு செய்துள்ளோம் என்றார்.

# தொலைதூர கல்வி இயக்குனரகத்தில் பட்ட படிப்பை முடிக்க கூடுதல் வாய்ப்பு

புதுச்சேரி, ஜன. 16–

எம்.பி.ஏ., மற்றும் முதுகலை மாணவர்கள் தொலைதூர கல்வி இயக்குனரகத்தில் பட்ட படிப்பை முடிப்பதற்கான காலம் நீட்டிக்கப்பட்டுள்ளது.

இது குறித்து புதுச்சேரி பல்கலைக் கழக மக்கள் தொடர்பு அதிகாரி மகேஷ் வெளியிட்டுள்ள செய்தி குறிப்பு:

புதுச்சேரி பல்கலைக் கழக தொலைதூர கல்வி இயக்குனரகத்தின் கீழ் பட்டப்படிப்பை முடிக்க கூடுதல் வாய்ப்பினை பல்கலைக்கழக துணைவேந்தர் குர்மீத் சிங் வழங்கியுள்ளார்.

அதன்படி, கடந்த 2005–6 கல்வியாண்டு முதல் 2016ம் ஆண்டு வரையிலான அனைத்து எம்.பி.ஏ., மாணவர்களும், 2014–15 முதல் 2016ம் ஆண்டு வரை பயின்ற எம்.காம்., எம்.ஏ., (ஆங்கிலம், சமூகவியல், இந்தி) மாணவர்கள் பாடத்திட்டத்தை முடிப்பதற்கு அதிகபட்சமாக நிர்ணயிக்கப்பட்ட காலத்தை கடந்தவர்கள் 2022 ஜனவரியில் படிப்பை முடிக்க முடியும்.

எனவே இம்மாணவர்கள் மீண்டும் தங்களை பதிவு செய்து கொண்டு பட்டபடிப்புக்கு தகுதி பெறுவதற்கும் மேலும் வாய்ப்பினை பெறலாம். 2005–06 ஆண்டு முதல் 2016ம் ஆண்டு வரை படித்த எம்.பி.ஏ., மாணவர்கள் https://dde.pondiuni.edu.inல் கொடுக்கப்பட்டுள்ள புதிய பாடத்திட்டத்தின்படி சமமான தாளை எழுத வேண்டும்.

மறுபதிவு கட்டணமாக 5 ஆயிரம் ரூபாய் செலுத்தி மாணவர்கள் இந்த வாய்ப்பினை பயன்படுத்திக் கொண்டு தேர்வுக்கு தங்களை பதிவு செய்து கொண்டு ஆன்–லைன் தேர்வு எழுதலாம்.

மறு பதிவு கட்டணம், தேர்வு விண்ணப்பம் பெற வரும் 25 கடைசி தேதியாகும்.

மேலும் விபரங்களுக்கு https://dde.pondiuni.edu.in என்ற இணைய முகவரியை பார்க்கவும்.

இவ்வாறு செய்தி குறிப்பில் கூறப்பட்டுள்ளது.

# பட்டப்படிப்புகளை முடிக்க மாணவர்களுக்கு இறுதி வாய்ப்பு

## புதுவை பல்கலைக்கழகம் அறிவிப்பு

புதுச்சேரி, ஜன.16-

நிர்ணயிக்கப்பட்ட காலத்திற்குள் பட்டப் படிப்பை முடிக்காத மாணவர்களுக்கு புதுவை பல்கலைக் கழகம் இறுதியாக ஒரு வாய்ப்பு அளித்துள்ளது.

புதுச்சேரி பல்கலைக்கழக மக்கள் தொடர்பு துணை பதிவாளர் மகேஷ் வெளியிட்டுள்ள செய்திக்குறிப்பில் கூறியிருப்பதாவது:-

### கூடுதல் வாய்ப்பு

இந்தியா முழுவதும் இருந்து வரும் மாணவர்களின் கோரிக்கைகள் காரணமாக தொலைதூரக் கல்வி இயக்குனரகத்தின் கீழ் பட்டப் படிப்பை நிர்ணயிக்கப்பட்ட அதிகபட்ச காலத்திற்குள் முடிக்காத எம்.பி.ஏ. மற்றும் முதுநிலை மாணவர்கள் தேர்வு எழுத புதுவை பல்கலைக்கழக துணைவேந்தர் குர்மீத்சிங் உத்தரவின்பேரில் கூடுதல் வாய்ப்பு அளிக்கப் பட்டுள்ளது.

அதன்படி 2005-06-ம் கல்வி யாண்டு முதல் 2016-ம் ஆண்டு வரையிலான அனைத்து எம்.பி.ஏ. மாணவர்களும் 2014-15 முதல் 2016 ஆண்டு பிரிவின் எம்.காம்., எம்.ஏ. (ஆங்கிலம், சமூகவியல், இந்தி) உள்ளிட்ட அனைத்து பாடப் பிரிவு மாணவர்கள் தங்கள் பட்டப்படிப்பை நிர்ணயிக் கப்பட்ட அதிகபட்ச காலத் திற்குள் முடிக்கவில்லை என்றால் அவர்கள் பட்டப் படிப்பை முடிப்பதற்கு வாய்ப்பு வழங்கப்பட்டுள்ளது.

### ஆன்லைனில் தேர்வு

இதன்படி மாணவர்கள் *https://dde.pondiuni.edu.in/* என்ற இணைய தளத்தில் கொடுக்கப்பட்டுள்ள புதிய பாடத்திட்டத்தின்படி தேர்வுகள் எழுத வேண்டும். இதற்காக மறுபதிவு கட்டணமாக ரூ.5 ஆயிரம் செலுத்தி மாணவர்கள் தேர்வு எழுத தங்களை பதிவு செய்து கொள்ளலாம். தேர்வுகள் ஆன்லைன் மூலம் நடைபெறும். இதுவே இறுதி வாய்ப்பு. இந்த வாய்ப்பினை பயன்படுத்தி தேர்வு எழுத விரும்பும் மாணவர்கள் புதுச்சேரி பல்கலைக்கழக தொலைதூர கல்வி இயக்குனரகத்தில் வருகிற 25-ந் தேதிக்குள் மறுபதிவு செய்து கொள்ள வேண்டும்.

இவ்வாறு அதில் கூறப்பட் டுள்ளது.

# முதுகலை பட்டபடிப்புகளை முடிக்க மாணவர்களுக்கு மீண்டும் வாய்ப்பு

## பல்கலைக்கழகம் அறிவிப்பு

புதுச்சேரி, ஜன.15–

புதுவை பல்கலைக்கழகம் வெளியிட்டுள்ள செய்திக் குறிப்பில் கூறியிருப்பதாவது:–

இந்தியா முழுவதும் மாணவர்களின் கோரிக்கையை ஏற்று தொலைதூர கல்வி இயக்குனரகத்தின் கீழ் படிப்பை முடிக்க நிர்ணயிக்கப்பட்ட அதிக பட்ச காலத்தை முடித்த எம்.பி.ஏ., முதுகலை மாணவர்களுக்கு கூடுதல் வாய்ப்பை துணைவேந்தர் குர்மீத்சிங் வழங்கியுள்ளார்.

### வாய்ப்பு

இதன்படி 2005–06–ம் கல்வியாண்டு முதல் 2016–ம் ஆண்டு வரை அனைத்து எம்.பி.ஏ. மாணவர்கள், 2014–15 முதல் 2016 வரை காலாண்டு பிரிவின் எம்.காம், எம்.ஏ. மாணவர்கள் பாடத்திட்டத்தை முடிக்கவும், மீண்டும் பதிவு செய்து படிப்பு தகுதி பெறவும் மேலும் ஒரு வாய்ப்பு வழங்கப்படுகிறது. புதிய பாடத் திட்டத் தின்படி சமமான தாளை மாணவர்கள் எழுத வேண்டும். மறுபதிவு கட்டணமாக ரூ.5, ஆயிரம் செலுத்தி மாணவர்கள் இந்த வாய்ப்பை பயன்படுத்தி தேர்வுகளுக்கு தயாராகலாம். இவர்களுக்கு ஆன்லைனில் தேர்வு நடத்தப்படும்.

### மறுபதிவு

இந்த வாய்ப்பை பயன் படுத்தி தேர்வு எழுத விரும்பும் மாணவர்கள், புதுவை பல்கலைக்கழக தொலைதூர கல்வி இயக்குனரகத்தில் உடனடியாக தங்களை மறுபதிவு செய்யலாம்.

மறுபதிவு கட்டணம், தேர்வு விண்ணப்பம் பெற கடைசிதேதி வருகிற 25–ந்தேதி வரை நீட்டிக்கப்பட்டுள்ளது. மேலும் தகவல்களுக்கு தொலைதூர இயக்குனரக இணையதள பக்கத்தை பார்வையிடலாம்.

இவ்வாறு அதில் குறிப் பிடப்பட்டுள்ளது.

# தொலைதூர கல்வி இயக்கக தொடர் சொற்பொழிவு

**புதுச்சேரி, பிப். 19–**

புதுச்சேரி பல்கலைக் கழக தொலைதூர கல்வி இயக்கத்தில் உள்ள பட்ட படிப்புகளை நாடு முழுவதும் இருந்து மாணவர்கள் படிக்கின்றனர். இம்மாணவர்களுக்கு வழிகாட்ட வெபினார் மூலம் சர்வதேச இணைய வழி தொடர் சொற்பொழிவினை பல்கலைக் கழக தொலைதூர கல்வி இயக்ககம் முடிவு செய்துள்ளது.

இதற்கான துவக்க விழா நேற்று காணொலி வாயிலாக நடந்தது. புதுச்சேரி பல்கலைக் கழக தொலைதூர கல்வி இயக்கக இயக்குனர் ராமய்யா வரவேற்றார்.

புதுச்சேரி பல்கலைக் கழக துணைவேந்தர் குர்மீத் சிங் இணைய வழி சர்வதேச தொடர் சொற்பொழிவினை துவக்கி வைத்து பேசுகையில், 'கொரோனா தொற்று பரவல் உள்ள சூழ்நிலையில், பல்கலைக் கழக தொலைதூர கல்வி இயக்ககம் டிஜிட்டல் வடிவிலான சொற்பொழிவினை ஆரம்பித்துள்ளது நல்ல முயற்சி என' பாராட்டினார்.

ஆஸ்திரேலியா அறிவியல் அகாடமி தலைவர் சேனுபதி ஜெகதீஷ் சிறப்புரையாற்றினார். முதற் கட்டமாக அடுத்த மூன்று மாதத்திற்கு இணைய வழி சொற்பொழிவு நடத்தப் பட உள்ளது. அதில் மாணவர்களின் திறன் முன்னேற்றம், தலைமையத்துவம் உள்பட பல்வேறு தலைப்புகளில் சொற்பொழிவு நடக்க உள்ளது.

### புதுவை பல்கலை., தொலைதூர கல்வியில்

# முதுகலை படிப்பை முடிக்காதவர்கள் மீண்டும் தேர்வு எழுத கடைசி வாய்ப்பு

## 25ம் தேதிக்குள் பதிவு செய்ய அறிவுறுத்தல்

புதுச்சேரி, ஜன. 15-

புதுச்சேரி பல்கலைக்கழகத்தின் மக்கள் தொடர்பு பிரிவு உதவி பதிவாளர் மகேஷ் வெளியிட்டுள்ள செய்திக்குறிப்பு:

இந்தியா முழுவதிலுமிருந்து வரும் மாணவர்களின் பல கோரிக்கைகள் காரணமாக, தொலைதூர கல்வி இயக்குநரகத்தின் கீழ் பட்டப்படிப்பை முடிக்க நிர்ணயிக்கப்பட்ட அதிகபட்ச காலத்தை முடித்த எம்பிஏ மற்றும் முதுகலை மாணவர்களுக்கு கூடுதல் வாய்ப்பை புதுச்சேரி பல்கலைக்கழக துணைவேந்தர் குர்மீத் சிங் வழங்கியுள்ளார். 2005-06ம் கல்வியாண்டு முதல் 2016ம் ஆண்டு வரையிலான அனைத்து எம்பிஏ மாணவர்களும், 2014-15 முதல் 2016ஆம் ஆண்டு காலண்டர் ஆண்டு பிரிவின் எம்.காம், எம்.ஏ (ஆங்கிலம், சமூகவியல், இந்தி) மாணவர்களும், பாடத்திட்டத்தை முடிப்பதற்கு அதிகபட்சமாக நிர்ணயிக்கப்பட்ட காலத்தை கடந்தவர்கள் 2022 ஜனவரியில் படிப்பை முடிப்பதற்கும், தங்களை மீண்டும் பதிவு செய்து கொண்டு பட்டப்படிப்புக்கு தகுதி பெறுவதற்கும் மேலும் ஒரு வாய்ப்பு வழங்கப்படுகிறது.

2005-06 முதல் 2016 காலண்டர் ஆண்டு எம்பிஏ மாணவர்கள் https://dde.pondiuni.edu.in/ல் கொடுக்கப்பட்டுள்ள புதிய பாடத்திட்டத்தின்படி சமமான தாளை எழுத வேண்டும். மறுபதிவு கட்டணமாக ரூ.5000 செலுத்தி மாணவர்கள் இந்த வாய்ப்பை பயன்படுத்தி தேர்வுகளுக்கு தன்னை பதிவு செய்து கொண்டு ஆன்லைன் தேர்வுக்கு தோன்றலாம். இந்த வாய்ப்பைப் பயன்படுத்தி, தேர்வு எழுத விரும்பும் மாணவர்கள், புதுச்சேரி பல்கலைக்கழக தொலைதூரக் கல்வி இயக்குநரகத்தில் உடனடியாக தங்களை மறுபதிவு செய்து கொள்ளுமாறு உத்தரவிடப்பட்டுள்ளது.

ஜனவரி 2022 அமர்வு தேர்வுகளுக்கான மறுபதிவுக் கட்டணம் மற்றும் தேர்வு விண்ணப்பத்தைப் பெறுவதற்கான கடைசி நாள் வரும் 25ம் தேதி வரை நீட்டிக்கப்பட்டுள்ளது. முழுமையான விவரங்கள் அறிய, https://dde.pondiuni.edu.in/ என்ற இணையதளத்தைப் பார்க்கவும். இவ்வாறு அவர் கூறியுள்ளார்.

# Varsity offers additional chance to complete degree

## Last date for re-registration extended to January 25

SPECIAL CORRESPONDENT
PUDUCHERRY

The Pondicherry University has decided to give an additional chance to students for completing their degree courses under the Distance Education Programme.

Taking into account the demand from students, Vice-Chancellor Gurmeet Singh has decided to give an additional chance to MBA, M.Com, MA (English, Sociology and Hindi) students, who have exhausted the maximum period prescribed for completion of their degree, the University said in a release.

Students who did their MBA courses from academic year 2005-06 to 2016, and M.Com and MA students of academic year 2014-15 to 2016, have been given the opportunity.

Students, who want to avail the chance to appear for the examinations are directed to re-register themselves immediately with the Director, Directorate of Distance Education, Pondicherry University. The last date for re-registration has been extended to January 25, the release said.

For more details log on to https://dde.pondiuni.edu.in




Students must re-register themselves immediately with the Directorate of Distance Education, Pondicherry University.

புதுச்சேரி பல்கலைக்கழகத்தில்

# பட்டப்படிப்பு தகுதி பெற எம்பிஏ, முதுகலை மாணவர்களுக்கு கூடுதல் வாய்ப்பு

16/01/2022 ■ புதுச்சேரி

புதுச்சேரி பல்கலைக்கழகத்தில் தொலைதூரக் கல்வி இயக்குநகரத்தின் கீழ் பட்டப்படிப்பை முடிக்க நிர்ணயிக்கப்பட்ட அதிக பட்ச காலத்தை கடந்த எம்பிஏ மற்றும் முதுகலை மாணவர்கள் பட்டப்படிப்பு தகுதி பெறுவதற்கு கூடுதல் வாய்ப்பு வழங்கப்பட்டுள்ளது.

இதுதொடர்பாக புதுச்சேரி பல்கலைக்கழக மக்கள் தொடர்பு பிரிவு உதவி பதிவாளர் மகேஷ் வெளியிட்டுள்ள செய்திக்குறிப்பு:

இந்தியா முழுவதிலும் இருந்து வரும் மாணவர்களின் பல கோரிக்கைகள் காரணமாக, தொலைதூரக் கல்வி இயக்குநரகத்தின் கீழ் பட்டப்படிப்பை முடிக்க நிர்ணயிக்கப்பட்ட அதிகப்பட்ச காலத்தை முடித்த எம்பிஏ மற்றும் முதுகலை மாணவர்களுக்கு கூடுதல் வாய்ப்பை புதுச்சேரி பல்கலைக் கழக துணைவேந்தர் குருமீத்சிங் வழங்கியுள்ளார்.

▼ **புதிய பாடத்திட்டத்தின்படி சமமான தாளை எழுத வேண்டும்.**

2005-06-ம் கல்வியாண்டு முதல் 2016-ம் ஆண்டு வரையிலான அனைத்து எம்பிஏ மாணவர்களும், 2014-15 முதல் 2016-ம் ஆண்டு வரையிலான எம்.காம், எம்.ஏ (ஆங்கிலம் , சமூகவியல், ஹிந்தி) மாணவர்களும், பாடத்திட்டத்தை முடிப்பதற்கு அதிகப்பட்சமாக நிர்ணயிக்கப்பட்ட காலத்தை கடந்தவர்கள் இம்மாதம் (ஜன. 2022) படிப்பை முடிப்பதற்கும், தங்களை மீண்டும் பதிவு செய்துகொண்டு பட்டப்படிப்புக்கு தகுதி பெறுவதற்கும் மேலும் ஒரு வாய்ப்பு வழங்கப்படுகிறது.

2005-06 முதல் 2016 காலாண்டு எம்பிஏ மாணவர்கள் https://dde.pondiuni.edu.in/-ல் கொடுக்கப்பட்டுள்ள புதிய பாடத்திட்டத்தின்படி சமமான தாளை எழுத வேண்டும். மறுபதிவு கட்டணமாக ரூ.5,000 செலுத்தி மாணவர்கள் இந்த வாய்ப்பை பயன்படுத்தி தேர்வுகளுக்கு தன்னை பதிவு செய்துகொண்டு ஆன்லைன் தேர்வுக்கு தோன்றலாம். இந்த வாய்ப்பை பயன்படுத்தி, தேர்வு எழுத விரும்பும் மாணவர்கள், புதுச்சேரி பல்கலைக்கழக தொலைதூரக் கல்வி இயக்குநரகத்தில் உடனடியாக தங்களை மறு பதிவு செய்து கொள்ளுமாறு உத்தரவிடப்பட்டுள்ளது. ஜனவரி 2022 அமர்வு தேர்வுகளுக்கான மறுபதிவு கட்டணம் மற்றும் தேர்வு விண்ணப்பத்தை பெறுவதற்கான கடைசி தேதி வரும் 25 வரை நீட்டிக்கப்பட்டுள்ளது. முழுமையான விவரங்களை அறிந்துகொள்ள https://dde.pondiuni.edu.in/ என்ற இணைய தளத்தை பார்வையிடவும். இவ்வாறு அதில் கூறப்பட்டுள்ளது.

# Pondy Univ students can register by month-end to finish degree programme

**EXPRESS NEWS SERVICE** @Puducherry

AFTER requests from students across the country poured in, Vice Chancellor of Pondicherry University decided to give an additional chance for the MBA and PG students to complete their course, who have exhausted the maximum period prescribed for completion of the degree programme, under the Directorate of Distance Education.

The University, in a release, said that all the MBA students of 2005-06 academic year to 2016 Calendar year and M.Com, MA (English, Sociology, Hindi) students of 2014-15 to 2016 batch who have exhausted the maximum prescribed period for completion of the course is granted one more chance i.e. in January, 2022 to complete the course and qualify for the degree by re-registering themselves. The MBA students of 2005-06 to 2016 batches have to write an equivalent paper as per the new syllabus given at https://dde.pondiuni.edu.in/. The students can avail this opportunity by paying a re-registration fee of ₹5000/- to appear for examination by registering himself/herself to the required examinations by paying a normal Examination fee additionally.

Those students who want to avail this chance and appear for examinations are directed to re-register themselves immediately with the Director, Directorate of Distance Education, Pondicherry University.

The last date for receipt of the re-registration fee and exam application is extended till 25-01-2022 for January 2022 Session Examinations. For complete details, you may visit the website at: https://dde.pondiuni.edu.in/

PONBIL00129


வீர ஆஞ்சநேயர் தற்காப்புக்கலைகூடம்
மாணிக்கசெட்டியார் நகர், சண்முகாபுரம், புதுச்சேரி - 9.
புதுச்சேரி
ப. எண். 427/2019

Email: thillaimaildaily@gmail.com

THILLAI MAIL
# தில்லை மெயில்
தினசரி காலை நாளிதழ்

மலர் : 1 இதழ் : 214
VOLUME: 1 ISSUE: 214

8 பக்கம் ரூ.500 காசு

புதுச்சேரி (16-01-2022)
ஞாயிற்றுக்கிழமை

860 860 5550 860 860 5551
SRI ANNAMALAIYAR
ACTING DRIVERS
Good Driver
BEST SERVICE
D.K.Kumar
PUDUCHERRY

# தொலைதூர கல்வியை முடிக்க கூடுதல் வாய்ப்பு
# பல்கலைக்கழக உதவி பதிவாளர் மகேஷ் தகவல்

புதுச்சேரி, ஜன.16–

இது குறித்து புதுச்சேரி பல்கலைக்கழக உதவிபதிவாளர் மகேஷ் வெளியிட்டுள்ள செய்தி குறிப்பில் கூறியிருப்பதாவது:

இந்தியா முழுவதிலுமிருந்துவரும் மாணவர்களின் பல கோரிக்கைகள் காரணமாக, தொலைதூரக் கல்வி இயக்குநரகத்தின் கீழ் பட்டப்படிப்பை முடிக்க நிர்ணயிக்கப்பட்ட அதிகபட்ச காலத்தை முடித்த எம்பிஏ மற்றும் முதுகலை மாணவர்களுக்கு கூடுதல் வாய்ப்பை பாண்டிச்சேரி பல்கலைக்கழக துணை வேந்தர் குர்மீத்சிங் வழங்கியுள்ளார். 2005–06ஆம் கல்வியாண்டு முதல் 2016ஆம் ஆண்டு வரையிலான அனைத்து எம்பிஏ மாணவர்களும், 2014–15 முதல் 2016ஆம் ஆண்டு காலண்டர் ஆண்டுப் பிரிவின் எம்.காம், எம்.ஏ (ஆங்கிலம், சமூகவியல், ஹிந்தி) மாணவர்களும், பாடத்திட்டத்தை முடிப்பதற்கு அதிகபட்சமாக நிர்ணயிக்கப்பட்ட காலத்தைக் கடந்தவர்கள் 2022 ஜனவரியில் படிப்பை முடிப்பதற்கும், தங்களை மீண்டும் பதிவு செய்துகொண்டு பட்டப்படிப்புக்குத் தகுதி பெறுவதற்கும் மேலும் ஒரு வாய்ப்பு வழங்கப்படுகிறது. 2005–06 முதல் 2016 காலண்டர் ஆண்டுத் எம்பிஏ மாணவர்கள் https://dde.pondiuni.edu.in/ இல் கொடுக்கப்பட்டுள்ள புதிய பாடத்திட்டத்தின் படி சமமான தாளை எழுத வேண்டும். மறுபதிவுக் கட்டணமாக ரூ. 5000 செலுத்தி மாணவர்கள் இந்த வாய்ப்பைப் பயன்படுத்திக் தேர்வுகளுக்குத் தன்னைப் பதிவு செய்துகொண்டு ஆன்லைன் தேர்வில் பங்கேற்கலாம். இந்த வாய்ப்பைப் பயன்படுத்தி, தேர்வு எழுத விரும்பும் மாணவர்கள், புதுச்சேரி பல்கலைக்கழக தொலைதூரக் கல்வி இயக்குநரகத்தில் உடனடியாக தங்களை மறுபதிவு செய்து கொள்ளுமாறு உத்தரவிடப் பட்டுள்ளது. ஜனவரி 2022 அமர்வுத் தேர்வுகளுக்கான மறுபதிவுக் கட்டணம் மற்றும் தேர்வு விண்ணப்பத்தைப் பெறுவதற்கான கடைசித் தேதி 25.01.2022 வரை நீட்டிக்கப்பட்டுள்ளது. இதுபற்றிய முழுமையான விவரங்கள் அறிய, https://dde.pondiuni.edu.in/ என்ற இணைய தளத்தைப் பார்க்கவும்.

இவ்வாறு அதில் கூறப்பட்டுள்ளது.